

திருச்சிராப்பள்ளி பொதிகை கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (26.09.2023) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப்குமார், கைத்தறித்துறை உதவி இயக்குநர் ரவிக்குமார், கோ–ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் திருமதி.ப.அம்சவேணி, மேலாளர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி கூடுதல் (பொ) சி.ஐயப்பன், மாநகராட்சி நகரப்பொறியாளர் சிவபாதம், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய மேலாளர்கள் சங்கர், பி.அப்துல்ரகுமான் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.6.38 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், செப். 27 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் மற்றும் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியங்களில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.6.38 கோடி மதிப்பீட்டில் 04 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள சாலை உள்ளகட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் பெரும்பான்மையான சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், அரியலூர் மற்றும் செந்துறை ஒன்றியங்களில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் நான்கு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி அரியலூர் ஒன்றியம் இராயம்புரம் ஊராட்சியில் ரூ.188 இலட்சம் மதிப்பீட்டில் இராயம்புரம் பொட்டவெளி சாலை கி.மீ 0/0 2/2 வரை, 2.20 கி.மீ உள்ள சாலை மேம்பாடு செய்தல், 1 சிறு பாலம் திரும்ப கட்டுதல் மற்றும் 129 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுதல் பணியினையும், அதனைத் தொடர்ந்து செந்துறை ஒன்றியம், வாளரக்குறிச்சி கிராமத்தில் ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புலிக்குறிச்சி பாளையபாடி மணகெதி கி.மீ 5/0 முதல் 6/0 வரை உள்ள 3.75 மீ அகலமுள்ள சாலையை 5.50 மீ சாலையாக அகலப்படுத்தி பலப்படுத்துதல் பணியினையும், பின்னர் நாகல்குழி ஊராட்சியில் ரூ.185 இலட்சம் மதிப்பீட்டில் உஞ்சினி வாரியங்காவல் கி.மீ 8/0 முதல் 9/0 வரை உள்ள 3.75 மீ சாலையை அகலப்படுத்தி 5.50 மீ சாலையாக அகலப்படுத்தி பலப்படுத்துதல் பணியினையும், அதனைத் தொடர்ந்து இலைக்கடம்பூர் ஊராட்சியில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் செந்துறை மாத்தூர் கி.மீ 1/0 முதல் 2/0 வரையிலும், 2/8 முதல் 4/0 வரை சாலை மேம்படுத்தும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான பொருட்களை கொண்டு விரைவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், சாலை அகலமாக உள்ள இடங்களில் மரங்களை நட்டு வைக்கவும் சம்மந்தப்பட்ட அலுலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர்கள் சிட்டிபாபு, ராஜா, வட்டாட்சியர் (செந்துறை) பாக்கியம் விக்டோரியா, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், ஊராட்சிமன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### குன்னம் சட்டமன்றத் தொகுதியில்

# மருத்துவ அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!

பெரம்பலூர், செப். 27 -

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க.மருத்துவ அணி சார்பில், கொளக்காநத்தம் ஊராட்சியில் உள்ள, அரசு மேல்நிலைப் பள்ளியில் மாபெரும் ஒருங்கிணைந்த இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

குன்னம் சட்டமன்ற தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் சுதாகரன் வரவேற்புரையாற்றினார்.

ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவரும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளருமான என்.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு இந்த மருத்துவ முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இந்த முகாமில் சர்க்கரை நோய் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு, ரத்தக்கொதிப்பு நோய் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

புற்றுநோய் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

கண் பரிசோதனை மற்றும் கண் புரை கண்டறிதல், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நலம், தோல் நோய் மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவம் மற்றும் ஆலோசனைகள், பொது அறுவை சிகிச்சை ஆலோசனைகள், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் ஆகியவற்றிற்கு ஆலோசனைகள் வழங்கி, பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மருத்துவ அணி மாவட்ட தலைவர் மருத்துவர் ஜெயலட்சுமி,மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் அ.கருணாநிதி, மாவட்ட மருத்துவ அணி துணை தலைவர் மருத்துவர் தனபால், மருத்துவ அணி மாவட்ட துணை அமைப்பாளர் மருத்துவர் பாலச்சந்தர், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் சிலம்பரசன், துணை அமைப்பாளர்கள் சோலைமுத்து, பிரேமலதா,

மாவட்ட கலை, இலக்கியப் பேரவை அமைப்பாளர் சுந்தர்ராசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.இளையராஜா, கொளக்காநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் என்.ராகவன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் காமராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் குமார்,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ்,

மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், ஒன்றிய பொருளாளர் ராமசாமி மாவட்ட பிரதிநிதிகள் ரா.இளவரசு, அன்புசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாசன் கண் மருத்துவமனை, விவேகானந்தா நர்சிங் கல்லூரி செவிலியர்கள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் மஸ்தான் கலந்து கொண்டு உலாமாக்களுக்குவிலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முகுந்தன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் காஞ்சிகோயில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தமிழக முதல்வர் மாணவ, மாணவிகளின் கல்வியில் மிகுந்த அக்கறைகொண்டு

# பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை. செப். 27 -

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கைக்குறிச்சி, ஸ்ரீ பாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் 25.09.2023 அன்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இம்முகாமில் கல்வி கடன் பெறுவதற்கான ஆணைகளை மாணவர்களுக்கு வழங்கி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் கல்வியில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்டம்தோறும் மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமினை நடத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார் கள். அதன்படி புதுக் கோட்டை மாவட்டத்தில் மாணவ, மாணவிகள் உயர்கல்வி பயில்வதற்கான, மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாம் துவக்கி வைக்கப்பட்டது. இம்முகாமில் தனியார் மற்றும் பொதுத் துறை சார்ந்த 22 வங்கிகள் மூலமாக மாணவ, மாணவிகளுக்கு கல்வி கடன் பெறுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டது.

இம்முகாமில் 10ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு, டிப்ளமோ மற்றும் ஐடிஐ படிப்பதற்கும், 12ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு பட்டப்படிப்பு படிப்பதற்கும், கல்லூரிகளில் முதலாம் ஆண்டு முதல் நான்காம் ஆண்டு வரை படித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், முதுநிலை கல்வி படித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மாபெரும் கல்விக் கடன் வழங்கும் முகாம் நடைபெறுகிறது.

இம்முகாமில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கலை மற்றும் அறிவியியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பயிற்சி கல்லூரி, நர்சிங் கல்லூரி மற்றும் மாநில, ஒன்றிய அரசின் பதிவு பெற்ற அனைத்து வகையான கல்லூரி மாணவ, மாணவிகள் இந்த மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமில் கலந்துகொண்டனர்.இம்முகாமில் மாணவ, மாணவிகள் கல்வி கடன் பெறுவதற்கு தேவையான சான்றிதழ்களை பெற்றிட இசேவை மைய அரங்கமும் அமைக்கப்பட்டிருந்தது. இந்த சேவை மையத்தில் மாணவ, மாணவிகளுக்கான இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்றத் திட்டங்களை மாணவ, மாணவிகள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொண்டு, கல்வியில் உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்த், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, தமிழ்நாடு சிறப்புத் திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் முனைவர் ஜெ.வணங்காமுடி, ஸ்ரீ பாரதி கலைக் கல்லூரி இயக்குனர் முனைவர் குமுதா, கல்லூரி முதல்வர் கவிதா, ஸ்ரீ பாரதி மகளிர் கல்வி நிறுவன கௌரவ விரிவுரையாளர் முனைவர் மு.பாலசுப்பிரமணியன், கல்வி நிறுவனத் தலைவர் குரு.தனசேகரன், வட்டாட்சியர் விஸ்வநாதன், பி.ராஜேஸ்வரி, இரா.ஆனந்த், ஆ.செந்தில், தவ.பாஞ்சாலன், வெ.முத்துக்கிருஷ்ணன், சக்தி ராமசாமி, என்.சாத்தையா, கே.சி.சிவக்குமார், எம்.எம்.பாலு, சுப.செல்வம், கவிவேந்தன், தெய்வானை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### திண்டுக்கல் ஐ.லியோனியின் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம்!

# தஞ்சையில் கலைஞர் நூற்றாண்டு விழா! திருச்சி சிவா தொடங்கி வைத்தார்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமை!

தஞ்சாவூர், செப். 27 -

தஞ்சாவூர் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திண்டுக்கல் ஐ.லியோனியின் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது.

தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வரகூர் க.காமராஜ் வரவேற்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாநில இலக்கிய செயலாளர் வி.பி.கலைராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக கொள்கைப்பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு பாடநூல் கழகத்தலைவரும், கழக கொள்கைப்பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி பட்டிமன்ற நடுவராக இருந்து சிறப்புரையாற்றினார்.

பட்டிமன்றம் காலங்களை கடந்து கலைஞர் வாழ்வதற்குப் பெரிதும் காரணம் இலக்கிய பணியா? அரசியல் பணியா? என்ற தலைப்பில் நடைபெற்றது.

இலக்கிய பணியே! என்ற தலைப்பில் நாகை நாகராஜ், பவானி கண்ணன், கோவை நாகநந்தினி ஆகியோரும்,

அரசியல் பணியே என்ற தலைப்பில் தூத்துக்குடி சரத்பாலா, கந்திலி கரிகாலன், ஈரோடு சத்தியவதி ஆகியோரும் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், த.கார ல் மார்க்ஸ், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.பரசுராமன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, எஸ்.என்.மணிமாறன், அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்ட நிறைவில் கோட்டை பகுதிச் செயலாளர் எஸ்.சி.மேத்தா நன்றியுரையாற்றினார்.

## கடலூர் ப.அப்பு சந்திரசேகரனின் தாயார் ப.வள்ளி மறைவு!

கடலூர், செப். 27 -

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் நகரக் கழகம் - நினைவில் வாழும் பழனிசாமி (தலைமை ஆசிரியர் ஓய்வு)யின் துணைவியாரும், கடலூர் கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளரும் 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான ப.அப்பு சந்திரசேகரன், ப.பாஸ்கரன், ப.கணேசன், ப.சுரேஷ் ஆகியோரின் தாயாருமான ப.வள்ளி அவர்கள் நேற்று முன்தினம் (25.9.2023-திங்கள்) காலை 8 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் கோடியமங்கலத்தில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாமை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார். உடன் மாநில இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் என்.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கு.வைத்தியநாதன், ஏ.ஆh.ராஜா, ஞான.இமையநாதன், எம்.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் பலர் உள்ளனர்.